ஆதிதிராவிடர் - பழங்குடியின மக்களின் கல்வியறிவு நிலையினை உயர்த்திட

# ரூ.82 கோடியில் விடுதி - பள்ளிக் கட்டிடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, மே 16 -

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ, மாணவியர்களுக்காக ரூ.82.02 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள விடுதிகள், பள்ளிக் கட்டடங்கள் மற்றும் ஏகலைவா உண்டி உறைவிடப்பள்ளிக் கட்டடங்களை திறந்து வைத்து, தாட்கோ மாவட்ட மேலாளர்கள் மற்றும் செயற்பொறியாளர் அலுவலகப் பயன்பாட்டிற்காக ரூ.2.04 கோடி மதிப்பிலான 23 வாகனங்களை வழங்கி, வீடற்ற 500 தூய்மைப் பணியாளர் நல வாரிய உறுப்பினர்களுக்கு ரூ.55 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய வீடுகளை வாங்க மானியம் வழங்குவதற்கான ஆணைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.05.2023) தலைமைச் செயலகத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் 42 கோடியே 45 இலட்சத்து 67 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஆதிதிராவிடர் மாணவ, மாணவியர்களுக்கான 21 விடுதிக் கட்டடங்கள், 16 கோடியே 59 இலட்சத்து 14 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 9 பள்ளிக் கட்டடங்கள் மற்றும் 22 கோடியே 97 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 4 ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிக் கட்டடங்களை திறந்து வைத்தார்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் கல்வியறிவு மற்றும் சமூகபொருளாதார நிலையினை உயர்த்தி அவர்களது வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் வகையில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகள் மற்றும் விடுதிகளை கட்டுதல், அம்மாணவ, மாணவியர்களுக்கு பல்வேறு கல்வி உதவித்தொகைகள் மற்றும் கட்டணச் சலுகைகள் வழங்குதல், இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குதல், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், அம்மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்குதல், சுயதொழில் / வேலைவாய்ப்பினை உருவாக்கிட பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளித்தல் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

**மாணவ, மாணவியர்களுக்கான விடுதிக் கட்டடங்கள்!**

அந்த வகையில், கரூர் மாவட்டம் கடவூர், மதுரை மாவட்டம் - ரேஸ்கோர்ஸ், திருச்சிராப்பள்ளி மாவட்டம் - துறையூர், தூத்துக்குடி மாவட்டம் - ஒட்டப்பிடாரம் மற்றும் தூத்துக்குடி, மதுரை மாவட்டம் - உசிலம்பட்டி, சிவகங்கை மாவட்டம் - கொம்புக்காரனேந்தல், காஞ்சிபுரம் மாவட்டம் - ஸ்ரீபெரும்புதூர், நாகப்பட்டினம் மாவட்டம் - வேதாரண்யம் ஆகிய இடங்களில் 18 கோடியே 89 இலட்சத்து 46 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பள்ளி மாணவர்களுக்கான 9 விடுதிக் கட்டடங்கள்;

திருநெல்வேலி மாவட்டம் - குலவணிகர்புரம், தேனி மாவட்டம் - எரசக்கநாயக்கனூர் மற்றும் கோட்டூர், திருவாரூர் மாவட்டம் - பேரளம், காஞ்சி புரம் மாவட்டம் - காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் 6 கோடியே 79 இலட்சத்து 86 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பள்ளி மாணவியர்களுக்கான 5 விடுதிக் கட்டடங்கள்;

கரூர் மாவட்டம் தாந்தோணிமலை, தஞ்சாவூர் மாவட்டம் - ஒரத்தநாடு, புதுக்கோட்டை மாவட்டம் - மருதன்கோன்விடுதி, மதுரை மாவட்டம் - சொக்கிகுளம், சென்னை மாவட்டம் - இராயபுரம், காஞ்சிபுரம் மாவட்டம் - காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் 16 கோடியே 76 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கான 7 விடுதிக் கட்டடங்கள்;

என மொத்தம் 42 கோடியே 45 இலட்சத்து 67 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கான 21 விடுதிகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிக் கட்டடங்கள்!**

காஞ்சிபுரம் மாவட்டம் ரெட்டமங்கலம், செங்கல்பட்டு மாவட்டம் - மீனம்பாக்கம், கடலூர் மாவட்டம் - சேப்பாக்கம், மேலவன்னியூர் மற்றும் சிதம்பரம் நந்தனார் பள்ளி, சேலம் மாவட்டம் - வெள்ளிகவுண்டனூர், புதுக்கோட்டை மாவட்டம் - முள்ளன்குறிச்சி, இராணிப்பேட்டை மாவட்டம் - எலத்தூர், சேலம் மாவட்டம் - தாத்தியாம்பட்டி ஆகிய இடங்களில் உள்ள 9 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் 16 கோடியே 59 இலட்சத்து 14 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வகுப்பறைக் கட்டடங்கள், அறிவியல் ஆய்வுக்கூடங்கள் உள்ளிட்ட கட்டடங்கள்;

திருப்பத்தூர் மாவட்டம் - கீழூர், திருவண்ணாமலை மாவட்டம் - புளியம்பட்டி, நீலகிரி மாவட்டம் மு. பாலாடா, நாமக்கல் மாவட்டம் - செங்கரை ஆகிய இடங்களில் 22 கோடியே 97 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிக் கட்டடங்கள்;

**தாட்கோ பயன்பாட்டிற்காக 23 வாகனங்களை வழங்குதல்!**

என மொத்தம் 39 கோடியே 56 இலட்சத்து 84 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிக் கட்டடங்களை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக செயல்படும் தாட்கோ நிறுவனத்தின், மாவட்ட மேலாளர்கள் மற்றும் செயற்பொறியாளர்களின் அலுவலகப் பயன்பாட்டிற்காக 2 கோடியே 4 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 23 வாகனங்களை வழங்கிடும் விதமாக, முதலமைச்சர் அவர்கள் அவ்வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

**தூய்மைப் பணியாளர்களுக்கு வீடுகள்!**

2022-23ஆம் ஆண்டிற்கான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மானியக் கோரிக்கையில், தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள, வீடற்ற 500 தூய்மைப் பணியாளர் உறுப்பினர்களுக்கு தகுதியின் அடிப்படையில் தலா ரூ.11 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.55 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் கட்டப்படும் பயனாளிகள் பங்களிப்புடன் கூடிய வீடுகள் வாங்க மானியம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, வீடற்ற 500 தூய்மைப் பணியாளர் நல வாரிய உறுப்பினர்களுக்கு ரூ.55 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் கட்டப்பட்டுள்ள வீடுகளை வாங்க அவர்களுக்கு மானியம் வழங்குவதற்கான ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக முதற்கட்டமாக 7 தூய்மைப் பணியாளர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் ஆணைகளை வழங்கி தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி என். கயல்விழி செல்வராஜ், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் உ.மதிவாணன், தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியத்தின் துணைத் தலைவர் திருமதி செ.கனிமொழி பத்மநாபன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திருமதி ஜி.லட்சுமி பிரியா, ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர், த. ஆனந்த், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழக (தாட்கோ) மேலாண்மை இயக்குநர்

கே.எஸ்.கந்தசாமி, பழங்குடியினர் நல இயக்குநர் எஸ். அண்ணாதுரை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.05.2023) தலைமைச் செயலகத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் தாட்கோ மாவட்ட மேலாளர்கள் மற்றும் செயற்பொறியாளர்களின் அலுவலகப் பயன்பாட்டிற்காக 23 வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி என். கயல்விழி செல்வராஜ், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் உ. மதிவாணன், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திருமதி ஜி.லட்சுமி பிரியா, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழக (தாட்கோ) மேலாண்மை இயக்குநர் கே.எஸ். கந்தசாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாநில நிர்வாக அமைப்புக்கு முதுகெலும்பாக விளங்கும்

# வருவாய்த்துறை சார்பில் 224 நில வரைவாளர்களுக்கு பணிநியமன ஆணை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, மே 16 -

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் 698 நில அளவர்கள் மற்றும் 224 வரைவாளர்களுக்கு பணிநியமன ஆணைகள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.5.2023) சென்னை, கலைவாணர் அரங்கத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக நில அளவர் பணியிடத்திற்குத் தேர்வு செய்யப்பட்ட 698 நபர்களுக்கும், வரைவாளர் பணியிடத்திற்குத் தேர்வு செய்யப்பட்ட 224 நபர்களுக்கும் பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 15 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

வருவாய்த்துறை, மாநிலத்தின் நிருவாக அமைப்புக்கு முதுகெலும்பாக விளங்குவதோடு, சாமானிய மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும், அரசின் பல்வேறு சமூகப் பொருளாதாரத் திட்டங்களை செயல்படுத்துவதிலும் முக்கிய பங்காற்றுகிறது. மழை, வெள்ளம், புயல் போன்ற பேரிடர் காலங்களில் மக்கள் துயர் துடைக்கும் துறையாகவும் இத்துறை விளங்கி வருகிறது. இத்துறையின் பணியினை மேலும் செம்மைப் படுத்தும் வகையில் அனைத்து வசதிகளுடன் கூடிய அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல், துறை அலுவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல், புதிய வருவாய் வட்டங்களை உருவாக்குதல், காலிப் பணியிடங்களை நிரப்புதல் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

**பட்டா வழங்குவதில் சிரமங்கள் நீக்கம்!**

அந்த வகையில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் கீழ் இயங்கும் நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட துறையில் காலியாக உள்ள நிலஅளவர் மற்றும் வரைவாளர் பணியிடங்களுக்கு உண்டான அடிப்படை கல்வித் தகுதியினை மாற்றியமைத்து புதிய தொழில் நுட்ப கல்வித் தகுதியின் அடிப்படையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக தேர்வு நடத்தப்பட்டு தேர்வு செய்யப்பட்ட 698 நிலஅளவர்கள் மற்றும் 224 வரைவாளர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக நேற்று முதலமைச்சர் அவர்கள் 15 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கி, வாழ்த்தினார். இந்தப் பணி நியமனம் மூலமாக பல்வேறு ஆண்டுகளாக பட்டா வழங்கப்படுவதில் இருந்து வந்த சிரமங்களை நீக்குவதற்கும், நிலம் மற்றும் நில அளவை சார்ந்த அனைத்து சேவைகளையும் உடனடியாக வழங்குவதற்கு உதவிகரமாக இருக்கும்.

**மாநில வரைபடங்கள்!**

முன்னதாக, தமிழ்நாடு நில அளவை மற்றும் பதிவேடுகள் துறையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள வரைபடக் கண்காட்சியினை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, பார்வையிட்டார். இக்கண்காட்சியில் பண்டைய சென்னை மாகாண வரைபடங்கள், மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்டதற்கு பிறகான சென்னை மாநில வரைபடங்கள், தற்போதைய தமிழ்நாடு மாநில வரைபடங்கள், மாவட்டங்களின் வரைபடங்கள் போன்றவை இடம் பெற்றி ருந்தன.

இந்நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் அசன் மௌலானா, வருவாய் நிர்வாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கே.பிரபாகர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜெயந்த், நில சீர்திருத்தத் துறை ஆணையர்/முதன்மைச் செயலாளர் திருமதி பீலா ராஜேஷ், நில நிர்வாக ஆணையர் எஸ்.நாகராஜன், சமூக பாதுகாப்பு திட்ட ஆணையர் முனைவர் ந.வெங்கடாசலம், நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் டாக்டர் டி.ஜி. வினய் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

விவசாயிகளுக்கு உற்றத் தோழனாக விளங்கும்

# தி.மு.க. அரசின் நடவடிக்கைகளால் வேளாண் புரட்சி அரங்கேற்றம்!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பெருமிதம்!

*சென்னை, மே 16 -*

*விவசாயிகளுக்கு உற்றத் தோழனாக விளங்கும் தி.மு.க. அரசின் நடவடிக்கைகளால் வேளாண் புரட்சி அரங்கேறி வருகிறது என்று ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.*

*இது குறித்து 15.5.2023 தேதிய ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளதாவது:*



தினகரன்

மே 15, 2023 திங்கட்கிழமை

வேளாண் புரட்சி

தி.மு.க அரசு எப்போதுமே விவசாயிகளின் நண்பனாகவே இருந்துள்ளது. தமிழ்நாட்டில் பசுமை புரட்சி உருவானதில் திமுக ஆட்சியின் பங்களிப்பு அதிகம். கலைஞர் ஆட்சிக்காலத்தில், விவசாயிகளுக்கு கூட்டுறவு கடன்கள் தள்ளுபடி தொடங்கி, பயிர்கடன்களை காலதாமதம் இன்றி திருப்பி செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டியும் ரத்து செய்யப்பட்டது. இலவச மின் இணைப்பு, விளைவித்த காய்கறிகளை இடைத்தரகர்கள் இன்றி விவசாயிகளே விற்பனை செய்திட உழவர் சந்தை திட்டம், பழைய மின்மோட்டார்களை மாற்றி புதிய மின்மோட்டார்கள் வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் திமுக ஆட்சிக்காலத்தில் செயல்படுத்தப்பட்டன.

*தி.மு.க. அரசு எப்போதுமே விவசாயிகளின் நண்பனாகவே இருந்துள்ளது. தமிழ்நாட்டில் பசுமை புரட்சி உருவானதில் தி.மு.க. ஆட்சியின் பங்களிப்பு அதிகம். கலைஞர் ஆட்சிக்காலத்தில், விவசாயிகளுக்கு கூட்டுறவு கடன்கள் தள்ளுபடி தொடங்கி, பயிர்கடன்களை காலதாமதம் இன்றி திருப்பி செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டியும் ரத்து செய்யப்பட்டது. இலவச மின் இணைப்பு, விளைவித்த காய்கறிகளை இடைத்தரகர்கள் இன்றி விவசாயிகளே விற்பனை செய்திட உழவர் சந்தை திட்டம், பழைய மின் மோட்டார்களை மாற்றி புதிய மின்மோட்டார்கள் வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் தி.மு.க. ஆட்சிக்காலத்தில் செயல்படுத்தப்பட்டன.*

*தமிழ்நாடு முதல்வராக மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற நாளில் இருந்தே வேளாண்மைக்கு தனி முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. அவர் முதல்வராக பொறுப்பேற்ற போது தமிழ்நாட்டில் கொரோனாவின் தாக்கம் அதிகம் இருந்த நிலையில், ஊடரங்கு, பகுதி நேர கடைகள் அடைப்பு உள்ளிட்டவை அமலில் இருந்தன. ஆனால் விவசாயிகளை எதுவும் பாதிக்காத வகையில் வேளாண் பணிகளுக்கு எவ்வித தடையும் இல்லை என அவர் உத்தரவிட்டார்.*

*தமிழ்நாடு பட்ஜெட்டில் கடந்த 2 ஆண்டுகளாக வேளாண் துறைக்கு தனி பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டு, ஏராளமான திட்டங்கள் விவசாயிகளுக்கு அறிவிக்கப்பட்டு வருகின்றன. ஒன்றரை ஆண்டுகளில் மட்டும் 1.50 லட்சம் இலவச மின் இணைப்புகளை வழங்கி தமிழ்நாடு வரலாற்றில் புதிய சாதனையை இந்த அரசு படைத்தது.*

*சொன்னதை செய்யும் தி.மு.க. அரசின் நடவடிக்கைகளால் கடந்த இரு ஆண்டுகளாக தமிழகம் வேளாண்துறையில் தன்னிறைவு பெற்று திகழ்கிறது. வேளாண் துறையில் புதிய தொழில்நுட்பங்கள் அதிக மகசூலை ஈட்டி தருகின்றன. விவசாயிகளுக்கு தேவையான இடுபொருட்கள், உரங்கள், விதைகள் தக்க காலத்தில் கிடைப்பதோடு, அவை தட்டுப்பாடின்றி கிடைக்கவும் அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.*

*வடகிழக்கு பருவமழை காலத்தில் விவசாயம் செழிக்க அரசு எடுத்த நடவடிக்கைகள் காரணமாக கூடுதல் சாகுபடி கிட்டியுள்ளது. இந்நிலையில் வரும் செப்டம்பர் வரையிலான காரிப் பருவத்திற்கு மொத்தம் 10 லட்சத்து 38 ஆயிரம் டன் உரம் தேவைப்படும் என கணக்கிடப்பட்டுள்ளது. அதற்காக ஒன்றிய அரசின் உரத்துறையுடன் பேசி, தமிழ்நாட்டிற்கு தேவையான உரங்களை இருப்பு வைக்க வேளாண்துறை முனைப்பு காட்டி வருகிறது.*

*தமிழ்நாட்டில் பயிர் சாகுபடிக்கு 4.55 லட்சம் டன் ரசாயன உரங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது என வேளாண்மைத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார். இதனால் உரத்தட்டுப்பாட்டிற்கு வாய்ப்பு இல்லை என்றே கூற வேண்டும். பொட்டாஷ் உள்ளிட்ட உரங்களை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யவும் அரசு தீவிரம் காட்டி வருகிறது. உரங்களைப் பொருத்த வரை பதுக்கலும் விவசாயிகளை பாதிக்கக்கூடியதாகும். உரப்பதுக்கலைத் தடுத்திட வேளாண் அதிகாரிகள் குழுக்களாகப் பிரிந்து அடிக்கடி சோதனைகளை நடத்தி வருகின்றனர். கூடுதல் விலைக்கு உரம் விற்பனை நடந்தால், அவர்களது உரிமம் ரத்து செய்யப்பட்டு வருகிறது. விவசாயிகளின் உற்ற தோழனாக விளங்கும் திமுக அரசின் செயல்பாடுகளால், வேளாண்மையில் புரட்சி இயல்பாகவே அரங்கேறி வருகிறது.*

*இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.*

தி.மு.க. மாணவர் அணி

# மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ. அறிவிப்பு!

தி.மு.க. மாணவர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், வரும் 18.05.2023 வியாழக்கிழமை, காலை 10.00 மணியளவில், அண்ணா அறிவாலயத்தில் உள்ள, “கழக அலுவலகத்தில்”, எனது தலைமையில் மாணவர் அணித் தலைவர் இரா. ராஜீவ்காந்தி, மாணவர் அணி இணைச் செயலாளர்கள் சி.ஜெரால்டு, எஸ்.மோகன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில், மாநில மாணவர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள்** : 1) தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா. 2) இந்திய அளவில் மாணவர் கூட்டமைப்பு ஏற்படுத்துதல்.

"**அண்ணா அறிவாலயம்**,"
சென்னை - 18.
நாள் : 14.05.2023

**சி.வி.எம்.பி.எழிலரசன்** எம். எல்.ஏ.
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி

நாடாளுமன்றத் தேர்தலுக்கான முன்னோட்டம்!

# பா.ஜ.க.வின் ஆணவத்திற்குக் கிடைத்த தீர்ப்பு!

## அகில இந்திய கட்சித் தலைவர்கள் விமர்சனம்!

புதுடெல்லி, மே 16 -

“கர்நாடகத் தேர்தல் முடிவு பா.ஜ.க.வின் ஆணவத்திற்குக் கிடைத்த தீர்ப்பு” என்றும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு இது ஒரு முன்னோட்டம் என்றும் அகில இந்திய கட்சித் தலைவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து கட்சித் தலைவர்களின் கருத்து வருமாறு:-

**மம்தா பானர்ஜி (மேற்கு வங்க முதல்வர்):** மாற்றத்திற்கு ஆதரவாக தீர்க்கமான ஆணையை வழங்கிய கர்நாடகா மக்களுக்கு எனது வணக்கங்கள். மூர்க்கத்தனமான சர்வாதிகார, ஆதிக்க அரசியல் தோற்கடிக்கப்பட்டுள்ளது. பன்மைத்துவம் மற்றும் ஜனநாயக சக்திகள் வெற்றி பெற வேண்டும் என்று நாடு விரும்பும் போது, ஆதிக்கம் செலுத்தும் எந்த ஒரு அதிகார மையத்தாலும் அதை தன்னிச்சையாக அடக்க முடியாது. இதுதான் கர்நாடகா தேர்தல் முடிவு சொல்லும் நீதி, நாளைய பாடமும் கூட. பா.ஜ.வின் ஆணவம், சகிப்பின்மைக்கு எதிராக மக்கள் வாக்களித்துள்ளனர். கர்நாடகாவைத் தொடர்ந்து அடுத்ததாக சட்டீஸ்கரிலும், மத்திய பிரதேச சட்டப்பேரவை தேர்தலிலும் பா.ஜ. மண்ணை கவ்வும். 2024 மக்களவை தேர்தலுக்கு முன்பாக பா.ஜ.வின் முடிவு ஆரம்பமாகி விட்டது.

**பிரியங்கா காந்தி (காங். பொதுச் செயலாளர்):** காங்கிரஸ் கட்சிக்கு வரலாற்று சிறப்புமிக்க வெற்றியை தந்த கர்நாடக மக்களுக்கு மனமார்ந்த நன்றிகள். இது மாநிலத்தின் வளர்ச்சிக்கு முன்னுரிமை அளித்ததன் வெற்றி. தேசத்தை ஒருங்கிணைக்கும் அரசியலுக்கு கிடைத்த வெற்றி. கர்நாடக மக்களுக்கு அளித்துள்ள உத்தரவாதங்களை நிறைவேற்ற காங்கிரஸ் கட்சி முனைப்புடன் செயல்படும். 200 யூனிட் இலவச மின்சாரம், குடும்ப தலைவிகளுக்கு ரூ.2000 மாதாந்திர உதவி தொகை உள்ளிட்ட காங்கிரசின் 5 வாக்குறுதிகளை ஆட்சி அமைத்ததும் நிறைவேற்ற வேண்டும்.

**அகிலேஷ் யாதவ் (சமாஜ்வாடி தலைவர்):** பா.ஜ.வின் எதிர்மறை, வகுப்புவாத, ஊழல், பணக்காரர்களுக்கு ஆதரவான, பெண்களுக்கு எதிரான, இளைஞர்களுக்கு எதிரான, சமூகத்தை பிளவுபடுத்தும் பிரசாரம், தனிநபர் மைய அரசியலுக்கு எதிரான முடிவு தொடங்கிவிட்டது என்ற செய்தி கர்நாடகாவிலிருந்து வந்திருக்கிறது. இது பண வீக்கம், வேலையின்மை, ஊழல் மற்றும் காழ்ப்புணர்ச்சிக்கு எதிரான புதிய நேர்மறை இந்தியாவின் கண்டிப்பான ஆணை.

**மெகபூபா முப்தி (மக்கள் ஜனநாயக கட்சி):** கர்நாடகாவில் இருந்து இன்று நம்பிக்கையின் ஒளிக்கதிர் உதயமாகி உள்ளது. அடுத்த ஆண்டு மக்களவை தேர்தல் நடக்க இருப்பதால் இது ஒரு நல்ல செய்தி. நாடு முழுவதும் உள்ள மக்களும் வகுப்புவாத அரசியலை நிராகரிப்பார்கள் மற்றும் நாட்டின் வளர்ச்சி மற்றும் செழிப்புக்காக வாக்களிப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

**சஞ்சய் ராவத் (சிவசேனா உத்தவ் அணி தலைவர்):** கர்நாடகாவில் பஜ்ரங்பலி தந்திரம் பா.ஜ.வின் தலையிலேயே பெரும் இடியாக விழுந்துள்ளது. இது பிரதமர் மோடிக்கும், அமித்ஷாவுக்கும் கிடைத்த தோல்வி. கர்நாடகாவில் இன்று என்ன நடந்ததோ அதுவே 2024 மக்களவைத் தேர்தலில் நடக்கப் போகிறது.

**ப.சிதம்பரம் (காங்கிரஸ் மூத்த தலைவர்):** தீர்க்கமான தீர்ப்பை வழங்கிய கர்நாடக மக்களுக்கு மனமார்ந்த வாழ்த்துகள் மற்றும் மனமார்ந்த நன்றிகள். இந்த தேர்தல் வெறும் ஒரு மாநில சட்டசபைக்கு நடந்த தேர்தல் மட்டுமல்ல, அதையும் தாண்டி முக்கியத்துவம் வாய்ந்தது. கர்நாடக மக்கள் பா.ஜ.வின் இரட்டை இன்ஜின் அரசின் பணபலத்தையும் அதிகார பலத்தையும் வீழ்த்தி, நாட்டின் பிற பகுதிகளுக்கு சிறந்த வழியைக் காட்டியுள்ளனர்.

**கெஜ்ரிவால் (டெல்லி முதல்வர்):** பா.ஜ. கட்சி ஆட்சியில் இருக்கும் போது தங்களின் வேலையை செய்ய மாட்டார்கள். ஆனால் பிரசாரத்தில் குப்பையான பிரச்சினை களை கிளறி வெற்றி பெற முயற்சிப்பார்கள். இனியும் இதுபோன்ற தந்திரங்கள் பலிக்காது என்பதை பா.ஜ. உணர வேண்டும்.

**பூபேஷ் பாகேல் (சட்டீஸ்கர் முதல்வர்):** தேர்தலை திசை திருப்பும் பா.ஜ.வின் முயற்சிகள் பலனளிக்கவில்லை. கர்நாடகாவில் பாஜவின் தோல்வி பிரதமர் மோடியின் செயல்திறனுக்கான தோல்வி. முழு தேர்தலையும் அவர் தன்னையே மையப்படுத்தி பிரசாரம் செய்தார்.

**அசோக் கெலாட் (ராஜஸ்தான் முதல்வர்):** கர்நாடகா வகுப்புவாத அரசியலை விட வளர்ச்சி அரசியலை தேர்ந்தெடுத்துள்ளது. ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், சட்டீஸ்கர் மற்றும் தெலங்கானா ஆகிய மாநிலங்களில் நடைபெற உள்ள அடுத்தடுத்த சட்டப்பேரவைத் தேர்தல்களிலும் மீண்டும் இது நிகழும்.

**சரத் பவார் (தேசியவாத காங்கிரஸ் தலைவர்):** கர்நாடக சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள், அடுத்த ஆண்டு நடைபெற உள்ள மக்களவைத் தேர்தலுக்குப் பிறகான சூழ்நிலையை எடுத்துக்காட்டுவதாக உள்ளது. மக்களவை தேர்தலிலும் பா.ஜ.வை தோற்கடிப்பதே எங்கள் நோக்கம். ராகுல் காந்தியின் யாத்திரை காங்கிரசுக்கு வெற்றி பெற உதவியது.

**உமர் அப்துல்லா (தேசிய மாநாட்டு கட்சி தலைவர்):** கர்நாடகாவில் தோல்வி அடைந்துள்ளதால், காஷ்மீரில் சட்டப்பேரவை தேர்தலை நடத்தும் தைரியம் பா.ஜ. வுக்கு இப்போது இருக்காது.

**பினோய் விஸ்வம் (இந்திய கம்யூனிஸ்ட் எம்.பி.):** ஏழைகளுக்கு ஆதரவான வாக்குறுதிகளும், மதச்சார்பற்ற நிலைப்பாடும், வரலாற்றுச் சிறப்புமிக்க கர்நாடகா வெற்றியைப் பெற காங்கிரஸுக்கு உதவி யது. மோடி ஒருபோதும் வெல்ல முடியாதவர் அல்ல. அனைத்து மதச்சார்பற்ற சக்திகளும் ஒன்றுபட்டால், 2024ல் பா.ஜ. ஆட்சிக்கு முடிவு கட்ட முடியும்.

**பி.ஆர்.எஸ்.கட்சி :** அசிங்கமான, பிரித்தாளும் அரசியலை புறக்கணித்த கர்நாடகா மக்களுக்கு நன்றி. கர்நாடகாவில் ஆட்சி அமைக்கும் காங்கிரசுக்கு வாழ்த்துக்கள். எப்படி ‘தி கேரளா ஸ்டோரி’ கர்நாடகா மக்களை மகிழ்விக்க தவறியதோ, அதே போல, கர்நாடகாவின் தேர்தல் முடிவு தெலங்கானாவில் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாது.